# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 14 ஆம் ஞாயிறு | 6 ஜூலை 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**


மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்: சூழலியல் பணித்துவம்
வளங்கள் களவாடப்படுவதையும் சுரண்டப்படுவதையும் தடுத்திட அழைப்பு



# படைப்பு என்பது ஒரு பரிசு, வியாபாரப் பொருளல்ல

அவர்களை அனுப்புவதற்கு முன் எழுபத்திரண்டு நபர்களை ஒன்றுபட்ட பணிக்காகத் தயார்படுத்துவதில் இயேசு எதிர்கொண்ட மகத்தானப் பணியை கற்பனை செய்து பாருங்கள். இந்த சீடர்கள் அவர்களின் நிறைவுக்காக அல்ல, மாறாக அவர்களின் திறந்த மனப்பான்மைக்கான வளர்ச்சிக்காக, அவருடைய போதனையின் கீழ்ப்படிதலுக்காக, நம்பிக்கையில் மனமுவந்து நடப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களின் பணி தெளிவானது மற்றும் நோக்கத்தைக் கொண்டது. கடவுளின் அரசை அறிவிப்பது, அமைதியைக் கொண்டு வருவது மற்றும் குணமளிப்பது. அவர்கள் தங்கள் உழைப்பின் பலனைக் கண்ட மகிழ்ச்சியுடன் அவரிடம் திரும்பிவந்தார்கள். இந்த மகிழ்ச்சியான வருகை, நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிதலில் அடித்தளமாகக் கொண்ட கூட்டுப்பணியின் ஆற்றலைப் பிரதிபலிக்கிறது.

எழுபத்திரண்டு பேரின் பணி இன்றும் திருஅவையின் வாழ்க்கையில் தொடர்கிறது. திருஅவை இயல்பிலேயே தூதுரைப்பணியைக் (திருச்சபையின் நற்செய்திப்பணி எண்:2) கொண்டுள்ளது. மேலும் திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு நபரும் இந்த அழைத்தலில் பங்கு கொள்கிறார்கள். நாம் ஒவ்வொருநாளும் நற்செய்தியை அறிவிக்க அனுப்பப்படுகிறோம். வார்த்தையால் மட்டுமல்ல; நம் செயலாலும் அனுப்பப்படுகிறோம். இதில் விளிம்புநிலையில் இருப்போரைப் பராமரிப்பதும், கடவுளின் படைப்புகளுக்கு பொறுப்பாளர்களாக இருப்பதும் அடங்கும்.

**சுற்றுச்சூழல் மாற்றத்திற்கான அவசர அழைப்பைக் கவனிக்காமல் இன்று தூதுரைப்பணியைப் பற்றி பேசமுடியாது.** கடந்த மேமாதம் அன்னையர் தினத்திற்குப் பின் நடந்த ஒரு குறிப்பிடத்தக்க சம்பவம், இதுபோன்ற ஒரு அழைப்பை நம் தேசத்திற்கு நினைவூட்டியது. கிழக்கு மேற்கு நெடுஞ்சாலையில் ஒரு லோரி மோதியதில் தனது குட்டியை இழந்த ஒரு தாய் யானையின் துயரத்தைக் காணமுடிந்தது. தனது உயிரற்ற குட்டியின் அருகில் அந்தத் தாய் யானை நின்றிருந்த படம் தேசத்தையே துயரத்துக்குள்ளாக்கியது. கட்டுப்பாடற்ற மனிதனின் விரிவாக்கம் மற்றும் அலட்சியத்தால் பாதிக்கப்பட்ட பூமிக்கோளின் ஆழமான காயத்தை அது வெளிப்படுத்தியது. இயற்கையான வனவிலங்கு வழித்தடங்களை ஆக்கிரமிக்கும், புறக்கணிக்கும் மோசமாக திட்டமிடப்பட்ட ஒரு திட்டத்தின் விளைவாக இத்துயரம் ஏற்பட்டதாக பலரும் புலம்பினர். நவீன வளர்ச்சி பெரும்பாலும் சுற்றுச்சூழல் ஒருமைப்பாட்டைவிட பொருளாதார ஆதாயத்தை எவ்வாறு முன்னுரிமைப்படுத்துகிறது என்பதற்கு இது மற்றொரு அறிகுறி.

இந்தத் துக்ககரமான நிகழ்வு தனிமைப்படுத்தப்படவில்லை. இந்த நிகழ்வு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 'தூக்கி எறியும் கலாச்சாரம்' பற்றிய விமர்சனத்தையும் அனைத்துப் படைப்புகளும் ஒன்றோடொன்று இணைந்திருப்பதைப் பற்றி மதிக்கவேண்டிய அவசரத் தேவையையும் எதிரொலிக்கிறது. (லாவ்டாதோ சி என்:22,139) கிறிஸ்துவர்களாக சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தேர்வு செய்யவேண்டிய ஒன்றல்ல, மாறாக அது நமது நம்பிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாகும். 'சுற்றுச்சூழல் நெருக்கடி என்பது ஆழ்ந்த உள்மாற்றத்திற்கான அழைப்பாகும்" என்று திருத்தந்தை எழுதுகிறார். (லாவ்டாதோ சி 217) அத்தகைய மாற்றம் படைப்பை ஒரு வியாபாரப் பொருளாக அல்ல ஒரு பரிசாகப் பார்க்க வழிவகுக்கிறது.

அந்த எழுபத்திரண்டு பேரின் அழைப்பைப் போலவே இன்றைய நமது அழைப்பும் நற்செய்தியை வாழ்ந்து அதை அறிவிப்பதாகும். ஆனால் இது மேலும் நமது பொது இல்லமான பூமியை அதன் அனைத்துப் படைப்புகள் பெரியவையிலிருந்து சிறியது வரை கடவுளின் நீதி, இரக்கம் மற்றும் அன்பை பிரதிபலிக்கும் வழிகளில் பராமரித்து பிரதிபலிப்பதாகும்.

> கடவுளின் கைவேலைப்பாடுகளைப் பாதுகாத்து, நற்பேறுகளை வாழ்ந்து காட்டுவதே நமது வாழ்க்கையின் அவசியமான அழைப்பாகும்.
> (லாவ்டாதோ சி 217)

### இன்றைய இறைவார்த்தை:

எசாயா 66: 10-14

திருப்பாடல்: 66: 1-7, 16,20

கலாத்தியர்: 6: 14-18

லூக்கா 10: 1-12, 17-20 (அ) 10: 1-9


INTERNAL CIRCULATION ONLY
BUL 27/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org